# இடம் பொருள் கலைஞர்

93

**மகிழவன்**

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மனுநீதி பெயரில் சமூகநீதி!**



# மனுநீதி பெயரில் சமூகநீதி!

## மக்களைத் தேடி வந்த நிர்வாகம்!

அரசின் நிர்வாகத்தை எளிய மக்களும் எளிதில் அணுகிடும் வகையில், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, வருவாய்த் துறை, நிர்வாகத் துறைகளின் அமைப்பு, பாரம்பரியமும் பெருமையும் மிக்க மூத்த துறையாகும். அரசின் நிர்வாகத்தில் முதுகெலும் பாகத் தொடர்ந்து விளங்கும் துறை. முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோதெல்லாம் வருவாய்த் துறையில் பல முத்திரைச் சாதனைகளைப் படைத்து இருக்கிறார். அந்த வகையில், உருவாக்கப்பட்ட மகத்தான மக்கள் தொடர்புத் திட்டம்தான் மனுநீதி திட்டம்.

### திட்டத்தின் நோக்கம்

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், முதலமைச்சராகப் பதவியேற்ற கலைஞர், அண்ணாவின் பிறந்த நாள் திட்டமாக 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மனுநீதித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அரசின் திட்டங்கள் மக்களுக்குச் சென்று விட்டதா அல்லது செல்வதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றை, மக்கள் அதிகாரிகளிடம் நேரடியாக முறையிட்டு, தீர்க்க வெளிப்படையான அரசு நிர்வாகத்தை நடத்தும் வகையில், இந்தியாவிலேயே முதல் முறையாக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

கிராமங்களில் வாழும் ஏழை, எளிய, நலிவடைந்த மக்கள் அரசிடம் குறைகளைத் தெரிவிக்க, அலுவலர்களைத் தேடிச் சென்று காத்திருக்க வேண்டியிருந்த நிலைமையை மாற்றி, அதிகாரிகள் மக்களைத் தேடிச் சென்று, மனுக்களைப் பெற்றுக் குறைகளை முடிந்த அளவில், அங்கேயே உடனுக்குடன் தீர்த்து வைத்திடும் வகையில், இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டது.

மனுநீதித் திட்டத்தின் வழியாக மாதந்தோறும் இரண்டாம் புதன்கிழமைகளில் அல்லது எந்தெந்த தேதியில், எந்தெந்த கிராமங்களில் இத்திட்டத்தை நடத்த வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை, மாவட்ட ஆட்சியர்கள் மாதந்தோறும் தயாரிக்கின்றனர்.

மாதம் ஒரு முறை நடத்தப்படும், இம்மனுநீதித் திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களும் கலந்துகொண்டு மக்களின் குறைகளைக் கேட்டு அறிகின்றனர். முகாம் நடைபெறும் நாள் பற்றிய தகவல்கள், அரசுத் தரப்பில் இருந்து முன்னரே மக்களிடம் அறிவிப்பும் செய்யப்படுகிறது.

### உடனடித் தீர்வுகள்

நில அடமானம், மனை அடமானம், பட்டா மாற்றம், பட்டா நகல் கேட்டல், சர்வே எண் கேட்டு மனு, சப்-டிவிஷன் செய்தல், நிலத்தை அளந்து கல்நடுதல், ஆக்கிரமிப்புகளைக் காலி செய்தல், கடன் தொகை செலுத்த கெடு, நீர்ப்பாசன வசதி செய்தல், கால்நடைக்குப் பவுண்டு கட்டுதல், முதியோர் உதவித் தொகை, சாதிச்சான்று வழங்குதல், வேலை வாய்ப்பு, தீ விபத்து நிவாரணம், தியாகிகள் மானியக் கோரிக்கை, என மக்களின் கோரிக்கைகளைப் பெற்று மனுநீதித் திட்டத்தின் வழியாக, அவற்றை நிவர்த்திச் செய்து தருகின்றனர்.

மனுநீதித் திட்டத்தின் வாயிலாகப் பெறப்படும் மனுக்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகின்றன. மனுநீதித் திட்ட முகாம் முடிந்ததும், மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அதிகாரிகள் பள்ளிக் கட்டடங்கள், அந்தப் பகுதியில் நடந்து வரும் அரசின் பணிகள், நீர்நிலைகள் போன்றவற்றை ஆய்வு செய்யும் நடைமுறையும் தொடர்கின்றன. எந்தக் காரணத்தின் பொருட்டும் மனுநீதி முகாமை தள்ளிவைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என அரசு அறிவுறுத்தியுள்ளது.

### மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை

மனுநீதித் திட்டத்தினைத் தீவிரமாகக் கண்காணித்து ஆய்வு மேற்கொண்டு, அது குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 25-ஆம் தேதிக்கு முன்னர், வருவாய் நிர்வாக



ஆணையருக்கு அனுப்ப வேண்டும் என, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

வருவாய் நிர்வாக ஆணையர் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை ஆய்வுசெய்து, இந்தத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அரசுக்கு காலாண்டு அறிக்கை ஒன்றைத் தொடர்ந்து அனுப்பும் நடைமுறையும் தொடர்கிறது.

### சாதனை படைத்த கலைஞர் அரசு

மனுநீதித் திட்டத்தின் வழியாக, 15.9.1969 முதல் 30.9.1974 வரை ஐந்தாண்டு காலத்தில் எட்டு லட்சத்து 35 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு, 7 இலட்சத்து 70 ஆயிரத்து 616 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. அதாவது, திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட தொடக்கக் காலங்களிலேயே 92.2 சதவிகிதம் அளவுக்கு மக்கள் குறைகளைத் தீர்த்து, சாதனை படைத்தது கலைஞர் அரசு.

### திட்டத்தை முடக்கிய அ.தி.மு.க.

ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்பு, மனுநீதித் திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் கண்டு கொள்ளவில்லை. முறையாக நடைமுறைப்படுத்தாமல் திட்டம் முடக்கப்பட்டது. மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெறவே, கையூட்டு கேட்கும் நிலை உருவானது. இந்நிலையில், 1996-ஆம் ஆண்டுத் தேர்தலின்போது கழகத் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக மனுநீதித் திட்டத்தை, மீண்டும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என உறுதி அளித்திருந்தது.

1996-ஆம் ஆண்டில், நான்காவது முறையாக கலைஞர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், மனுநீதித் திட்டத்துக்கு உயிர் கொடுக்கப்பட்டு, மக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் தீர்க்க வழி ஏற்படுத்தினார்.

1996-ஆம் ஆண்டு, மே மாதத்திற்குப் பிறகு, 2000-ஆம் ஆண்டு நவம்பர் வரை மனுநீதித் திட்டத்தின்கீழ் 11 இலட்சத்து 5 ஆயிரத்து 961 மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்களில் இருந்து 5 இலட்சத்து 42 ஆயிரத்து 607 மனுக்களில் இருந்த கோரிக்கைகள் நிவர்த்திச் செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்ட கோரிக்கைகள் இல்லாத, பொதுக் கோரிக்கைகள் கொண்ட மனுக்கள் சேர்ந்தன. அந்தக் காலக்கட்டத்தில் 9 இலட்சத்து 73 ஆயிரத்து 794 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டது.

**‘மக்களுடன் முதல்வர்’ எனப் புதிய புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், மக்கள் குறை தீர்ப்புத் திட்டங்களில் முதன்மையான திட்டமாக உள்ளது மனுநீதித் திட்டம்.**

இன்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலான பல திட்டங்களுடன், மனுநீதித் திட்டத்திலும், மக்கள் தங்களின் கோரிக்கைகளை முன்வைத்துத் தீர்வு பெற்று வருகின்றனர்.

குறிப்பாக, இன்றைய நிலையில், ‘மக்களுடன் முதல்வர்’ எனப் புதிய புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், மக்கள் குறை தீர்ப்புத் திட்டங்களில் முதன்மையான திட்டமாக உள்ளது மனுநீதித் திட்டம். கலைஞர் ஆட்சிக் காலத்தில் செயல்வடிவம் கொடுக்கப்பட்ட மனுநீதித் திட்டம், மக்களின் மனத்தில் நீங்காமல் இடம்பெற்று, இன்றளவும் தீர்வுகளை அளித்து வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் தொலைநோக்குப் பார்வைக்கும், திட்டமிடும் ஆற்றல், செயல்படுத்தும் திறன் ஆகியவற்றுக்கு ஆகச்சிறந்த சான்றாக மனுநீதித் திட்டம் இன்றும் திகழ்கிறது.

**...வலம் வருவோம்**

---

## ‘தி கேரவன்’ இதழின் துணிச்சல்!

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், ஓய்வுபெற உள்ள நிலையில், ‘தி கேரவன்’ (The Caravan) இதழ், அவர் குறித்து நீண்ட கட்டுரையை எழுதியுள்ளது. சௌரவ் தாஸ் என்பவர் எழுதிய அந்தக் கட்டுரையை மொழியாக்கம் செய்து, சுருக்கமாக எழுதி இருக்கிறார், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார்.

“சந்திரசூட் அவர்கள் தலைமை நீதிபதியாக வரப்போகிறார் என்பது நீதித்துறையை உற்றுநோக்குபவர்களிடம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அவரது தாராளவாத சிந்தனையும், சட்டங்களில் அவருக்கிருந்த புலமையும் அவரைப் பற்றிக் கட்டமைக்கப்பட்டிருந்த ‘சமரசமற்ற நீதிபதி’ என்ற பிம்பமும் மட்டும் அதற்குக் காரணங்களல்ல, அவருக்கு முன்பு பதவியிலிருந்த தலைமை நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, ரஞ்சன் கோகோய், எஸ்.ஏ.போப்டே, என்.வி.ரமணா, யு.யு.லலித் முதலானோர் நீதித்துறை மீதான நம்பிக்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக மங்கச் செய்திருந்தனர். அதுவும் அவர் மீதான எதிர்பார்ப்புக்குப் பின்னணியாக இருந்தன. ஆனால், அந்த எதிர்பார்ப்பை ஈடேற்றுவதில் எப்படி நீதிபதி சந்திரசூட் தோற்றுப்போனார் என்பதை, இந்தக் கட்டுரை ஆதங்கத்தோடு விவரிக்கிறது, என ரவிக்குமார் குறிப்பிட்டுள்ளார்.

தவிர, ‘லோயா மர்ம மரணம்’, ‘கியான்வாபி மசூதி’, ‘சிவசேனா கட்சிப் பிளவு’ உள்ளிட்ட வழக்குகளில் அவர் அளித்த தீர்ப்புகள் குறித்த விமர்சனம், அவர் தலைமை நீதிபதியாக இருந்த காலத்தில் நீதிபதிகள் நியமனம், இடமாற்றல் ஆகியவற்றில் கொலேஜியத்தின் செயல்பாடு ‘மாஸ்டர் ஆஃப் ரோஸ்டர்’ என்ற விதத்தில், தலைமை நீதிபதியின் செயல்பாடு ஆகியவற்றில், சந்திரசூட்டின் இன்னொரு முகத்தை ஆதாரத்துடன் விளக்கி இருக்கிறார், சௌரவ் தாஸ்.

40 க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகளிடம் உரையாடியதில் பெற்ற தகவல்களைக் கொண்டு இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. தலைமை நீதிபதி சந்திரசூட் குறித்து, இப்படி ஒரு கட்டுரையை எழுதுவதற்கு சட்டத்திலும், நீதி நிர்வாகத்திலும் நல்ல புலமை இருந்தால், மட்டும் போதாது, துணிச்சலும் வேண்டும் என்பதே, இன்றைய நிலைமையாக உள்ளது. ‘தி கேரவன்’ கட்டுரை முழுமையாக தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு, பரவலாக வாசிக்கப்பட வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் கரங்களால் பொன்னாடை!



ம.கோகுல்நாத்

1994-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், தமுக்கம் மைதானத்தில், மதுரை மண்டல தி.மு.க. மாநாடு நடைபெற்றது. அப்போது மாநாட்டு வரவேற்புக் குழுவில் இடம்பெற்றிருந்த, என் தந்தை எஸ்.எஸ்.மனோகரன் அவர்களின் பணியைப் பாராட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், என் தந்தைக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது மதுரை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராகக் கழகப் பணியாற்றிய, என் தந்தை வழியில் இன்றைக்கு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணித் தலைவராகப் பொறுப்பு வகித்துப் பணியாற்றி வருகிறேன்.

**– ம.கோகுல்நாத், தலைவர், மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி, வாடிப்பட்டி, மதுரை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் ‘திராவிட நாடு!’

1946-ஆம் ஆண்டு வாக்கில், திராவிடர் கழகத்தில் இருந்தபோது, **‘திராவிட நாடு’** கொள்கையை ஆதரித்த பேரறிஞர் அண்ணா, மாநில மறுசீரமைப்பிற்குப் பின்னர், தனித் தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்தார். பின்னர், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைப் பெறும் நோக்கில், மாநில சுயாட்சிக் கொள்கையை முன்வைத்துப் போராடினார்.


---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

652

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131